பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்

மத்தேயு :28:20

செய்தி மலர்
2017
ஜுன்

இதழ் : 02
மலர் : 14



# சபை ஊழியரின் அன்பு மடல்



## நான் உங்களுடனே கூட இருக்கிறேன்

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த மே மாதம் முழுவதும் நம்மைக் கண்மனிபோல பாதுகாத்து வழிநடத்தின தேவன் வரும் ஜுன் மாதத்திலும் அற்புதமாக வழிநடத்துவார் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் ஊழியத்தை நிறைவேற்றி முடித்த பிறகு பரமேறுவதற்கு முன்பதாக சொன்ன வார்த்தை "இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்று (மத்-28:20) அதனால் நாம் எதற்குமே கவலைப்படவோ, பயப்படவோ தேவையில்லை. அல்லேலூயா!

### 1. நம் தாழ்வில் நம்மோடு இருக்கிறார்

சங்கீதக்காரனாகிய தாவீது சொல்கிறான் "நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது" என்று (சங்கீ-136:23). யோசேப்பு தன் சொந்த சகோதரர்களால் ஏமாற்றப்பட்டு அனாதையாய் புற ஜாதிகளிடத்தில் அடிமையாய் விற்கப்பட்டான். எவ்வளவோ தாழ்வுகள் அவனது வாழ்வில் வந்தாலும் நம்பிக்கையோடு கூட எல்லாவற்றையும் எதிர்கொண்டான். காரணம் யார் கைவிட்டாலும் தேவாதி தேவன் தன்னை கைவிடமாட்டார் என்று உறுதியாய் நம்பினான். அதனால் அவனை எகிப்து தேசத்தை ஆளக்கூடிய பிரபுவாக உயர்த்தினார்.

### 2 நம் கண்ணீரின் பாதையில் நம்மோடு இருக்கிறார்

மார்த்தாளும் மரியாளும் தன் சகோதரன் லாசரு மரித்து கல்லறையில் வைக்கப்பட்டு நான்கு நாட்கள் ஆனபிறகு இயேசு அவர்களை பார்க்கப் போனார்.

 **அந்த சகோதரிகள் இயேசுவைப் பார்த்து அழுதார்கள். அவர்களோடு சேர்ந்து இயேசு கண்ணீர் விட்டார்.(யோவா-11:35) ஆம் பிரியமானவர்களே இந்த உலகத்தில் நாம் சந்தோஷமாக இருக்கும்போது நம் சந்தோஷத்தை பங்கு போட்டுக்கொள்ள அநேகர் வருவார்கள். ஆனால் அதே சமயத்தில் கண்ணீரின் பாதையில் கலங்கி நிற்கும்பொழுது நம்மை ஆறுதல் படுத்த யாருமே வரமாட்டார்கள். அதனால் தான் இயேசு நம்மைத் தேடி வருகிறார். நம்மோடு கூட நம் கண்ணீரின் கஷ்டங்களில் பங்கு எடுத்துக்கொள்ளுகிறார். நம்மோடு கூட அழுகிறார். நம் கண்ணீரின் சூழ்நிலைகளை மாற்றுகிறார். அல்லேலூயா. மரித்த லாசருவை உயிரோட எழுப்பினார். அந்த சகோதரிகளின் கண்ணீரைத் துடைத்தார். நம் ஆண்டவர் எவ்வளவு நல்லவர் பார்த்தீர்களா?**

## 1. <u>மரண இருளில் நம்மோடு இருக்கிறார்</u>

அவநம்பிக்கையான மரணத்தை இயேசு கிறிஸ்து தாமே அனுபவித்து மூன்றாம் நாளில் மகிமையான உயிர்த்தெழுதல் மூலம் மனுக்குலத்திற்கு நம்பிக்கையை கொடுத்தார். அவர் சொன்னார் **"நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன் என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்"** என்று (யோவா-11:25) அதனால்தான் பவுல் சொன்னார் மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே உன் கூர் எங்கே? (1-கொரி-15:55) ஆகவே மரணத்தைப் பார்த்து நாம் அஞ்சவேண்டியதில்லை. அவனவன் தன் தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற் பலனானவர் கிறிஸ்து பின்பு அவர் வருகையில் **அவருடையவர்கள்** உயிர்ப்பிக்கப்படுவார்கள். (1-கொரி-15:23) இயேசு சொன்னார் **"மரித்தேன் ஆனாலும் இதோ, சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறேன். ஆமென் நான் மரணத்திற்கும், பாதளத்திற்குமுறிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன். இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர் நான் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன் என்று திருவுளம் பற்றுகிறார்"** <u>(வெளி-1:8,18)</u> ஆகவே நாமும் கூட தாவீதைப் போல தைரியமாக சொல்லலாம் **" நான் மரண இருளில் பள்ளத்தாக்கிலும் நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன் தேவரீர் என்னோட கூட இருக்கிறீர் உமது கோலும் உம் தடியும் என்னைத் தேற்றும்"** என்று (சங்கீ-23:4) ஆம் கர்த்தரே நம்மை ஆறுதல் படுத்துகிறவர். நம்மைத் தேற்றுகிறவர். உங்கள் இருதயம் பயப்படாமலும் கலங்காமலும் இருப்பதாக.

## 2. வறுமையின் நேரத்தில் நம்மோடு இருக்கிறார்

ஒரு தீர்க்கதரிசி மரித்துப் போனார் அவர் மனைவி எலிசாவிடம் வந்து உமது அடியானாகிய என் புருஷன் இறந்து போனான். உமது அடியான் கர்த்தருக்கு பயந்து நடந்தான் என்பதை அறிவீர். கடன் கொடுத்தவன் இப்போது என்

இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக் கொள்ள வந்தான் என்று கண்ணீர் விட்டு அழுதாள். (2-இராஜா-4-7) பாருங்கள் ஒரு கர்த்தருடைய ஊழியக்காரன் வீட்டிலே வறுமை உண்டானது. ஆனால் கர்த்தர் கைவ-டுவாரா? எலிசாவின் மூலமாக ஒரு பெரிய அற்புதத்தை செய்தார். அந்த விதவையிடம் இருந்த ஒரு குடம் எண்ணெயை வாங்கி ஜெபித்து அவளிடத்தில் கொடுத்தார். அதிலிருந்து எண்ணெயை மற்ற காலி பாத்திரங்களிலே வார்க்க வார்க்க அது வந்துகொண்டேயிருந்தது. அந்த எண்ணெயை விற்று வந்த பணத்தில் அவள் கடன்களையெல்லாம் அடைத்தாள். எத்தனை ஆச்சரியம்! இப்படிப்பட்ட அற்புதங்கள் மூலம் இப்போதும் கூட கர்த்தர் தம் பிள்ளைகளின் வறுமையைப் போக்குவார் மனம் கலங்காதீர்கள். வறுமையின் சூழ்நிலையில் நமக்கு உதவி செய்ய அருள் நாதர் இயேசு இருக்கிறார். உங்கள் வாழ்க்கையை அவர் வளமாக்குவார். குறைவுகளை நீங்கச் செய்வார். சங்கீதக் காரன் சொல்கிறான் "சிங்கக் குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும், கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங்குறைவுபடாது" (சங்கீ-34:10)

### 3. நோய்கள் மத்தியில் நம்மோடு இருக்கிறார்

எசேக்கியா ராஜா நோய் வாய்ப்பட்டு மரணத்தருவாயில் இருக்கும்போது புலம்புகிறான். ஆ கர்த்தாவே நான் உமக்கு முன்பாக உண்மையும், மனஉத்தமுமாய் நடந்து உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று அழுதான்.

ஆண்டவர் மனதுருகினார். அவர் சொன்னார் உன் விண்ணப்பத்தைக் கேட்டேன் உன் கண்ணீரைக் கண்டேன். இதோ நான் உன்னை குணமாக்குவேன். மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்திற்கு போவாய் என்று சொல்லி அவனை குணமாக்கினார். (2-இராஜா-20:1-11) ஆம் நம்முடைய கஷ்ட நோய் படுக்கையிலே நம் தேவாதி தேவன் நம்மைத் தாங்குகிறார், மனதுருகுகிறார், தொட்டு சுகமாக்குகிறார். அல்லேலூயா!

பிரியமானவர்களே! நம் தேவன் அற்புதத்தின் தேவன் குறைவுகளை நிறைவாக்குகிறவர். குழந்தைப் பாக்கியம் இல்லாமல் மன வேதனையிலிருந்த சூனோமியாள் எலிசா செய்த ஜெபத்தின் மூலம் பிள்ளைப் பாக்கியத்தைப் பெற்றுக்கொண்டாள். (2-இராஜா-4:16) தன் இன்னுயிரை ஈந்து இரத்தம் சிந்தி இயேசு கிறிஸ்து நம்முடைய பாவம், சாபம், நோய் யாவற்றையும் நீக்கினார். அதனால்தான் அவர் சொல்கிறார் நான் சதா காலமும் உங்களோடு கூட இருக்கிறேன் என்று. அதனால் எப்பொழும் மகிழ்ச்சியாயிருங்கள்.

உ.கர்த்தர் தாமே வருகிற ஜூன் மாதம் முழுவது நம்மைக் கண்மனி போல பாதுகாத்து சகல ஆசீர்வாதங்களுக்குள்ளளும் வழி நடத்துவாராக இந்த வருஷம் தமிழ் நாட்டில் நல்ல மழையைத் தரும்படிக்கு ஜெபித்துக் கொள்ளுங்கள்.

கிறிஸ்துவின் பணியில் அன்பு சகோதரன

ஸ்டாலின்

பிரியமானவர்களே! அன்றாட வாழ்க்கையில் வாசல்களை தொடாமல் மனிதனின் வாழ்க்கை இருக்க முடியாது. வேதத்திலும் சில விசித்திர – வினோதமான வாசல்களைஇ நம் மனதில் நிறுத்தி வைக்காத வாசல்களைஇ எருசலேமில் தாவீதின் நகரத்தைச் சுற்றி அமைந்த வாசல்களை உங்கள் சிந்தைக்கு விருந்தாக படைக்கிறேன் சுருக்கமாக இதோ... ஆட்டு வாசல் (நெகே. 3:1):– இது புதிய ஏற்பாட்டிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது (யோவா. 5:2). இது எருசலேமின் வடகிழக்கு மூலையில் பெதஸ்தா குளம் அருகே இருந்தது. இன்றும் இப்பகுதியில் ஆட்டுச் சந்தை நடைபெறுவதாக கூறுகிறார்கள். முற்காலத்தில் இது பென்யமீன் வசல் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறது.

மீன் வாசல் (நெகே. 3:3):– முதல் தேவாலய காலத்தில் இது எருசலேமின் முக்கிய வாசலாக விளங்கியது (ஐஐநாளா. 3:14 செப். 1:10). இங்கு மீன் சந்தை இருந்திருக்கிறது. தற்கால தமஸ்கு வாசலின் அருகே இது இருந்திருக்க வேண்டும் என்று வேத வல்லுனர்கள் கருதுகின்றனர். பழைய வாசல் (நெகே. 3:6):– இது ஜெசனா வாசல் எனவும் அழைக்கப்படுகிறது. இது எருசலேமின் வடமேற்கு மூலையில் இருந்தது. இதனையே எப்பிராயிம் வாசல் என்றும் ஜனங்கள் அழைத்திருக்கிறார்கள். பள்ளத்தாக்கு வாசல் (நெகே. 3:13):– இது இன்னோம் கீதரோன் பள்ளத்தாக்குகளுக்கு இடைப் பட் ட திரோப போயோன் பள் ளத் தாக் கு நோக் கி அமைந் திருக் கிறது. இதன் மீது உசியா ராஜா கோபுரம் கட்டினான் என்று ஐஐநாளா. 26:9 –ல் வாசிக்கிறோம். அகழ்வாராய்ச்சியாளர்கள் கி.பி 1927 / 1928 –ல் இதனை கண்டு பிடித்ததாக வரலாறு கூறுகிறது. குப்பைமேட்டு வாசல் (நெகே. 3:14):– இந் த குப் பைமேட் டு வாசல் வழியாக குப்கைகளைக் கொண்டு போய் இன்னோம் பள்ளத்தாக்கில் கொட்டி எரிப்பார்களாம். ஆகவே அதன் பெயரிலே இதனை குப்பைமேட்டு வாசல் என்றழைத்திருக்கிறார்கள். ஊருணி வாசல் (நெகே. 3:15):– என்–ரோகேல் நீரூற்றுக்குச் செல்லும் தென் மேற்கு மூலைக்கு அருகிலிருந்த வாசலைத்தான் மூதாதையர்கள் ஊருணி வாசல் என்ற பெயரில் அழைத்திருக்கின்றனர். தண்ணீர் வாசல் (நெகே. 3:26):– இது எருசலேமின் தண்ணீர் உறைவிடமான சீகோன் நீரூற்றுக்குச் செல்லும் வாசல் இதுவாகும். இங்கு வைத்துதான் நியாயப்பிரமாணம் வாசிக்கப்பட்டது என்பது இதன் சிறப்பு (நெகே. 8:1 3 16 நெகே. 12:37). குதிரை வாசல் (நெகே. 3:28):– இங்கு குதிரைகள் கட்டப்படுகின்றன. இங்குதான் அத்தாலியாள் கொல்லப்பட்டாள் (ஐஐநாளா. 23:15). இதன் வழியாக கீதரோன் பள்ளத்தாக்குக்குச் செல்லலாம் (எரே. 31:40). இது கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கிறது. கிழக்கு வாசல் (நெகே. 3:29):– தற்கால தங்கவாசல் இந்தப் பகுதியில் இருந்திருக்க வேண்டும் என்று கருதும் ஆராய்ச்சியாளர்கள் இதுவே இதற்கான மிகுந்த சிறப்பு என்றும் கூறுகின்றனர். மிப்காத் வாசல் (நெகே. 3:31):– இது கிழக் கு மதிலின் வடக் குப் பகுதியில் அமைந்திருக்கிறது. இதனை பரிசோதக வாசல் என்றும் மொழி பெயர்க்கலாம். ஒருசிலர் இதனை காவல் வீட்டு வாசல் எனவும் கூறுகிறார்கள். வேறொரு சாரார் இதனையே தொகையிடும் வாசல் என்றும் அழைக்கின்றார்கள் (நெகே. 12:39)

# தேவ செய்தி

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, எல்லா ஆசீர்வாதங்களுக்கும் காரணகர்த்தராகிய அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்! வாழ்க்கையில் ஏமாற்றங்கள், ஆசீர் வாதங்களை எதிர் பார்த்த இடத்தில் இழப்புகள், நம்பினவர்கள் கைவிட்டார்கள், எதிர்பார்த்த காரியங்களில் தோல்வி, மற்றவர்களுடைய நகைப்புக்கும், நிந்தைக்கும் உள்ளாகி வெட்கமான நிலைமைக்குள் புதையுண்டு அகப்பட்டிருக்கின்ற நிர்பந்தமான சூழ்நிலைகளை பிறரோடும் பகிர்ந்து கொள்ள முடியாமல் தடுமாறி நிற்கின்ற உங்களைப் பார்த்துத் தேவன் சொல்லுகிறார். "உங்கள் வெட்கத துக்குப் பதிலாக, இரண்டத்தனையாய்ப் பலன் வரும் (ஏசாயா – 61:7)

நம்முடைய தேவன், தம்முடைய பிள்ளைகள் வெட்கம் அனுபவிப்பதைப் பார்த்து அமைதியாய் இருக்கிறவர் அல்ல. உங்களை வெட்கத்துக்குள்ளாக்கும் சத்துரு ஜெயம் பெறாதபடி பாதுகாத்து, வெட்கம் அனுபவிக்கிற அதே ஸ்தானத்தில் தமது இரட்டிப்பான பலனை அருளி ஆசீர்வதித்துக் கனப்படுத்துகிற தேவன்! வேதத்தில் நாம் பார்க்கும்போது யோபுவின் வாழ்வில் வெட்கத்துக்குள்ளாக்கின சிறையிருப்பின் வாழ்வைமாற்றி, இரட்டிப்பான பலனால் நிரப்பி, வெட்கத்தை அனுபவித்த அதே இடத்தில் யோபுவை தேவன் உயர்த்தினார்! (யோபு–42:10). இதே நம்முடைய தேவன் உங்களையும் எல்லா இக்கட்டுக்கும், வெட்கத்துக்கும் நீங்கலாக்கி இரட்டிப்பான பலனால் நிரப்பி உங்களை உயர்த்தும்படிக்கு

1.எக்காலத்திலும் கர்த்தரைத்துதியுங்கள்.

யோபு சுகமாய் வாழ்ந்திருந்த நாட்களில் ஒருநாள் யோபுவுக்கு இருந்த ஐசுவரியங்கள் முதல் பிள்ளைகள் வரைக்கும் யோபுவுக்கென்று இருந்த எல்லாம் அழிக்கப்பட்டுப் போயிற்று (யோபு 1:13–19) எல்லாவற்றையும் இழந்து தனித்தவனாய் தரித்திரத்தில் தள்ளப்பட்ட செய்தி வந்தபோது அந்த கொடிய இழப்பில் "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்"(யோபு 1:21) என்று தேவனை துதித்தார். இழப்பிலும் தேவனை துதிக்கின்ற வாழ்வில் தேவன் தமது இரட்டிப்பான ஆசீர்வாதத்தை தந்து நம்மை உயர்த்துகிறார். தாவீதின் அனுபவத்தில் அபிமெலேக்கால் துரத்திவிடப்பட்ட நிர்பந்தமான நிலைமை வந்த போது சொல்கிறார். "கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். அவர்துதி எப்போதும் என்வாயிலிருக்கும் (சங்கீதம் 34:1).

எனக்கு அன்பானவர்களே! இழந்தேன் என்று கூறி வாழ்வில் சந்திக்கின்ற ழப்புகளை, அனுகூலமற்ற சூழ நிலைகளை எண்ணி சோர்ந்து போகாமல் எல்லாவற்றிர்க்காகவும் கர்த்தரைத் துதியுங்கள். காரணம், நாம் இந்த

உலகத்தில் வரும்போது எதையும் கொண்டுவரவில்லையே, மட்டுமல்ல நாம் போகும்போது எதையும் கொண்டுபோவதுமில்லை. ஆகையால் எந்த சூழ்நிலையிலும் கர்த்தர் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு கிருபையினால் பாதுகாத்து நடத்தி வருகின்றார் அல்லவா! அதற்காக அகமகிழ்வுடன் கர்த்தரை ஸ்தோத்தரியுங்கள், இழப்புகள், தோல்விகள், ஏமாற்றங்கள், பல தீமையான காரியங்கள் வாழ்வை நெருக்கும் போது கர்த்தரை துதிக்க! துதிக்க! உங்கள் வாழ்வை அழிக்க சோதனைகளை கொண்டு வருகிற பொல்லாத சாத்தான் உங்களை விட்டு ஓடிப்போவான் இரட்டிப்பான ஆசீர்வாதத்தின் வாசல் உங்களுக்காக திறக்கப்படுவதை கண்டு அனுபவிப்பீர்கள்!

2.பாவத்துக்கு இடம் கொடாதிருங்கள்:

"இவையெல்லாவற்றிலும் யோபு பாவம் செய்யவுமில்லை, தேவனைப்பற்றி குறை சொல்லவுமில்லை". (யோபு 1:22) தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ்வில் சோதனைகளை கொண்டுவந்து தேவனுக்கு விரோதமாக பேசி பாவத்துக்கு இடம் கொடுக்கசெய்து தேவனை விட்டுவிலகச் செய்வதே பிசாசின் தந்திரம். ஆகையால், பிசாசுக்கு எதிர்த்து நின்று பரிசுத்த வாழ்வை காத்துக்கொள்ள தெளிந்த புத்தியுள்ளவர்களாக விழிப்புடன் இருங்கள் "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாக பிரிவினை உண்டாக்குகிறது" (ஏசாயா 59:2)

தன் மனைவியினால் வெறுக்கப்பட்ட நிர்ப்பந்தமான வேதனையின் உச்சக்கட்டத்திலும் யோபு பாவம் செய்யாதபடி தன்னைக் காத்துக்கொண்டார். (யோபு 2:10) எந்த சூழ்நிலையிலும், வார்த்தையிலும், செய்கையிலும் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிபரிசுத்தத்திலும், உத்தமத்திலும் நிலைநிற்க அற்பணியுங்கள் வெட்கத்துக்கு பதிலாக இரண்டத்தனையான பலனை பெற்றுக்கொள்வீர்கள்.

3.பிறருக்காக ஜெபியுங்கள்:

"யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார் . யோபுக்கு முன்னிருந்த எல்லாவற்றை பார்க்கிலும் இரண்டத்தனையாய் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்". (யோபு 42:10) யோபு சினேகிதருக்காக வேண்டுதல் செய்தார், இவர்கள் யோபுவின் உபத்திரவத்தில் யோபுவை நித்தித்தவர்கள்(யோபு 4:5-9). எனவே தான் யோபு சொன்னார் என் சிநேகிதர் என்னை பரிகாசம் பண்ணுகிறார்கள்.

வேதம் சொல்லுகிறது, உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களை துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். மற்றவர்களின் மீட்புக்காக தாகத்தோடும், ஆத்துமபாரத்தோடும், கிறிஸ்துவின் அன்பில் நிறைந்தவர்களாய் உங்களை அர்ப்பணியுங்கள். கட்டாயம் தேவன் உங்கள் சிறையிருப்பை, நிந்தையை, வெட்கமான நிலைமையை மாற்றி நீங்கள்

வெட்கத்தை அனுபவிக்கிற அதே இடத்தில் உங்களை ஆசீர்வாதமாக மாற்றி உயர்த்தி உங்களுக்கு புகழ்ச்சியும் கீர்த்தியும் உண்டாகச்செய்வார்.

கிருபை உங்களோடிருப்பதாக!

## ஆராதனை ஆராதனை

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே!

தேவன் தம் சொந்த குமாரனை பூமிக்கு அனுப்பி மனுக்குலத்திற்கு மீட்பின் வழியை தந்ததின் முக்கிய பிரதான நோக்கமே நாம் ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தரை ஆராதிப்பதற்காகத்தான். துதிப்பதற்கென்றும் ஆராதிப்பதற்கென்றும் தேவன் லூசிபர் என்ற தூதனை ஏற்படுத்தி இருந்தார். ஆனால் அவனுடைய மேட்டிமையினால் ஆராதனைப் பொறுப்பிலிருந்து தள்ளப்பட்டான். அவனோடு அவனுக்கு துணைபுரிந்த தூதர்களும் தள்ளப்பட்டார்கள். அவர்கள் தான் "சாத்தான்" என்றும் "பிசாசு" என்றும் அழைக்கப்படுகின்றனர் (எசே. 28:13-15). லூசிபரும் அவன் கும்பலும் தள்ளப்பட்ட பிறகு துதிப்பதற்கு பூமியிலே தேவன் தம்முடைய சாயலில் மனிதனைப் படைத்து தமக்கு அவன் கீழ்ப்படிந்திருந்து தம்மை ஆராதிக்க வேண்டும் என்று, தான் சிருஷ்டித்தவைகளை எல்லாம் மனிதனுக்குக் கீழ்ப்படுத்தினார். அதற்கு பிறகு உண்மையாய் உத்தமமாய் தன்னை ஆராதித்து தமக்கு பலி செலுத்துகிறவர்களை தேவன் ஆசீர்வதித்து அவர்களை நேசிக்கத் தொடங்கினார். அவர்களோடு முகமுகமாய் பேச ஆரம்பித்தார் நடத்தினார். ஆபேல், கேத், நோவா, ஏனோக்கு போன்றவர்கள் தேவனை ஆராதித்தார்கள். ஆபிரகாம் போகும் இடமெல்லாம் பலிபீடத்தைக்கட்டி தேவனை ஆராதித்து தொழுது கொண்டான் என்று வேதத்தில் வாசிக்கின்றோம். தாவீது துதிக்கு இலக்கணம் வகுத்தவர். சங்கீதங்களைப் பாடிப்பாடி ஆண்டவரை ஆராதித்து மகிழ்ந்தார். எல்லா நேரத்திலும் ஆண்டவரை மகிமைப்படுத்தினார். மீண்டும் மீண்டும் மனிதன் பாவத்தில் வீழ்ந்து தேவ மகிமையற்றவர்களாய் மாறினதால் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவன் மனுக்குலத்தை மீட்க வேண்டியதாயிருந்தது. அதற்கு ஒரே விலையாக இயேசுவை மனித குலத்தின் பாவத்திற்காக தேவன் ஒப்புக்கொடுத்தார். இந்த இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நமக்கு மீட்பு, இரட்சிப்பு கிடைத்திருக்கிறது. நாமும் மீட்கப்பட்டிருக்கிறோம் என்ற நிச்சயம் நமக்கிருந்தால் முதன்மையாக நாம் செய்ய வேண்டியது, "நம் தேவனாகிய கர்த்தரை ஆராதிப்பது" ஒன்றே. "இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன்" (சங். 116:13) "நான் உமக்கு ஸ்தோத்திரபலியை செலுத்தி கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுவேன்" (சங். 116:17) என்று தேவனை தொழுது கொள்ளும் முறையையும் வேத வசனம் நமக்கு கற்றுத் தருகிறது. நாமும் நம் ஜீவனுள்ள தேவனாகிய கர்த்தரை ஆராதிப்போம் ஆராதிக்கிறவர்களாய் வாழ்வோம். கர்த்தர் தாமே நம்மையும் ஆராதனை வீரர்களாக மாற்றுவாராக. ஆமென்.

## 2017 ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில்

1.கல்லெறிந்து (லேவி20:2)

2. தன் தகப்பனையும் தன் தாயையும் (லேவி 20:9) 3. துன் சகோதரனின் மனைவியை விவாகம் பண்ணுகிறவன் (லேவி 20:21)

4.இஸ்ரவேலரை (லேவி20:26) 5. பரிசுத்தவான்களாய் (20:26)

6. வேசி கற்பு குலைந்தவள் தன் புருஷனால் தள்ளபட்ட ஸ்திரி (லேவி21:7)

7. பிரேதம் (லேவியராகமம் 21:11)

8.பிரதான ஆசாரியன் (லேவி 21:11)

9. தன் வித்தை(லேவியராகமம் 21:15)

10. கன்னிகையாய் இருக்கிற ஒரு பெண்ணை (லேவி 21:14) 11.திரைகுள்ளே (லேவி21:23)

12. ஆரொனடைய சந்ததி (லேவி 22:7) 13. பரிசுத்த மனவைகள் (லேவி 22:10)

14. ஆடு, மாடு, மற்றும் வெள்ளாடு (லேவி 22:19)

15. குருடு, நெரிசல், முடம், கழலை,சொறி,புண்,விதை நசுங்கினது, நொறுங்கினது, காயம் பட்டது , அறுக்கபட்டது,(லேவி22:22,24)

## 2017 ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சாந்தி
Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. ஷீபா அருண் இம்மானுவேல்
Sis. ஷீபா பிரசாத்
Sis. . மரகதம் ஸ்டீஃபன்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. ஜீனா சதீஷ்குமார்

Sis. அ.ஜோன் அசோக் குமார்
Sis. நகோமி ஜான்ஸன்

Bro. ஜாண்
Bro. ஜாண்ஸன்
Bro. கண்ணன் ஜெபராஜ்

தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.

ரோமர் 14:17

"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; . . . " (ஆதி – 12:2)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. ஜெஸ்லி டேனியல்
செல்வி. ஆஸ்லின் கெசியா
செல்வி. பிரவீனா லாசர்
செல்வி. ஆன்ஸிலி ஆல்பர்ட்சிங்
செல்வி. பிரவீனா லாசர்
செல்வி.ஜெயபாரதி பாண்டியன்
செல்வி.பியூலா கலியமூர்த்தி
செல்வி. ரேஷ்மா அசோக்குமார்
செல்வி. நோயல் யோவா தாமஸ்
செல்வி. ஜெய்னி டேனியல்
செல்வி.ரெபேக்கா ஜாண்போஸ்க்கோ

செல்வன். வெங்கடேஷ் ராஜன்
செல்வன். ஃபீஸ்டஸ் ஃபெலிக்ஸ்
செல்வன். தம்பு குமார் ஜெயசீலன்
செல்வன். ஜுயன் லின்சன் ஜெபசிங்
செல்வன். கிங்ஸ்டன் ரிச்சர்ட்சன்
செல்வன். ராயன் சதீஷ்குமார்
செல்வன். ஜேக்கப் ஜெயக்குமார்
செல்வன். சாமுவேல் ஸ்டாலின்
செல்வன். ஸெர்வின் சிவகுமார்
செல்வன். ஜோஷ்வா ஜோசப்
செல்வன். ஜோஷ்வா ஜாண்சன்
செல்வன். ஆகாஸ் கிதியோன்
செல்வன். ரனால்டோ ஜோசப்
செல்வன். நிபதின் ஹரீஷ்
செல்வன். ஜாண் ஜெரமியா மில்லர்

சகோதரி. அனிதா ஆரோக்கியதாஸ்
சகோதரி. நிர்மலா யேசுதாஸ்
சகோதரி. அனிதா ஜெஸ்டின்
சகோதரி. மரியம் பாக்கியசெல்வி
சகோதரி. நித்யா ரோஸ் ஜோன்ஸ்
சகோதரி. டெய்சி ரோஸ் எபெநேசர்
சகோதரி. ஸோபியா மேஷாக்
சகோதரி. ஷீபா பிரசாத்
சகோதரி.இசைவாணி வில்கின்ஸ்சன்
சகோதரி. பாக்கியா ரவிஜாண் பீட்டர்

சகோ. ஜாண் கெஸ்டன்
சகோ. ஜெசீலன் .C
சகோ. ஸ்டீபன். R
சகோ. ஜஸ்டிஸ் விஜல் குமார்
சகோ. ஜெஸ்டின்
சகோ. பிரசாத் சுந்தரரேசன்
சகோ. வெங்கடேஷ் ஜெபராஜ்
சகோ. தேவதாஸ்
சகோ. பால் புருஷோத்தமன்
சகோ. கிரன் குமார்
சகோ. பக்தராஜ்
சகோ. பால் அறிவுசுடர்
சகோ. ஜஸ்டிஸ். P
சகோ. அந்தோனி சாமி
சகோ. பால் பாண்டியராஜ்
சகோ. கிறிஸ்டோபர் .M

உன்னை இந்த ஜனத்துக்கு எதிரே அரணான வெண்கல அலங்கமாக்குவேன்; (எரே.15:20)

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. லாவண்யா வினோத்குமார்
திருமதி & திரு. பால் ஜெகநாதன்
திருமதி & திரு. சஜின் ராஜன்
திருமதி & திரு. சுப்ரமணி கோவிந்தராஜுலு
திருமதி & திரு. சதீஷ்குமார். E
திருமதி & திரு. M. யேசுதாஸ்
திருமதி & திரு. டேவிட்ஜெயகுமார்
திருமதி & திரு. ஐசக்துரை
திருமதி & திரு. மகேஷ் ராஜ்
திருமதி & திரு. ஸ்டீபன். R

# 2017 ஜுன் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 04/06/2017 | சகோ.ஆரோக்கி தாஸ் | சகோ. சுகுமார் |
| 11/06/2017 | சகோ.டேவிட் ஜெயகுமார் | சகோ. கிறிஸ்டோபர் |
| 18/06/2017 | சகோ.ஆரோக்கியராஜ் | சகோ.ஐசக் துரை |
| 25/06/2017 | சகோ.பிரசாத் | சகோ. அற்புதராஜ் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 02/06/2017 | சகோ. வேலுராமர் | சகோ. ஸ்டாலின் |
| 09/06/2017 | வாலிபர் ஆராதனை | |
| 16/06/2017 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 23/06/2017 | சகோ.ஜெயசேகர் | சகோ. ஜெகநாதன் |
| 30/06/2017 | சகோ.எபநேசர் | சகோ. சாமுவேல் தாசையா |

**08 /06/ 2017 அன்று முழு இரவு ஜேபம்**
**நேரம் இரவு 10:00 முதல் அதிகாலை 2:00 வரை**

**மாதாந்திர பெண்கள் ஐக்கிய கூடுகை இடம், நாள், நேரம் பின்னர் அறிவிக்கபடும்**
**(வேத வினா ஆதியாகமம் அதிகாரத்தில் இருந்து –கேள்விகள் கேட்கபடும்)**

**30/06/2017 அன்று மாதாந்திர வாலிபர் ஐக்கிய கூடுகை**
**இடம் : பாஹீலில் உள்ள ஜெபவீடு – நேரம் மாலை 6:30 முதல் இரவு 8:30**
**(வேத வினா பகுதி யோசுவா புத்தகத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும்**

**2017ஆம் ஆண்டு சபையின் வாக்குதத்தம்**

**நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப் பெருகவே பெருகப்பண்ணுவேன் …..(** ***எபிரெயர் 6:14*** **)**

# 2017 ஜூன் மாதத்திற்கான வேத வினா!

## கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. எவைகளை ஒரே நாளில் கொல்ல கூடாது ?

2. இஸ்ரவேல் புத்திரர் நடுவே கர்த்தர் எப்படி மதிக்கபடுவார் ?

3. பஸ்கா பண்டிகை எந்த நாளில் கொண்டாட வேண்டும் ?

4. முதலாம் நாள் உங்களுக்கு ............................?

5. முதற்பலனாகிய கதிர் கட்டை ஆசாரியன் என்ன செய்வான் ?

6. எந்த நாளில் கர்த்தருக்கு புதிய போஜன பலி செலுத்த வேண்டும் ?

7. ஐம்பதாம் நாளில் சுகந்த வாசனையான தகனபலிகளாக எவைகளை செலுத்த வேண்டும் ?

8. பதிய போஜன பலியை செலுத்துகிற நாள் ......................நாள்?

9. வயலின்ஓரத்தில் இருக்கிறதையும் சிந்திகிடக்கிறதையும் யாருக்கு விட்டு விட வேண்டும ?

10. பாவ நிவர்த்தி செய்யும் நாளும் சபை கூடும் நாளும் எப்பொழுது ?

11. பாவ நிவர்த்தி செய்யும் நாளில் கர்த்தருக்கு எதை செலுத்த வேண்டும் ?

12. கூடாரப்பண்டிகையை ஏழாம் மாதத்தில் எந்த நாட்களில் ஆசாரிக்க வேண்டும் ?

13. நிலத்தின் பலனை சேர்த்து வைக்கும் நாளில் கர்த்தருக்கு எதை ஆசாரிக்க வேண்டும் ?

14. ஏழநாளும் கர்த்தருடைய சந்நிதியில் எப்படி இருக்க வேண்டும் ?

15. கர்த்தர் இஸ்ரவேலரை எங்கே குடியிருக்க பண்ணியிருந்தார் ?

விடைகளை வருகின்ற 20-06-2017 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps Group Seithi malar ATC) மூலமும் அனுப்பவும் # 66015503 ) விடைகளை வேதாகமத்தில் லேவியராகமத்தில் ( அதிகாரம் 22,23.ல் இருந்து பதிலைத் தேடுங்கள் ).

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – –மத்தேயு 7:7

சீனாவுக்கு சென்ற ஒரு மிஷனரி தன் ஸ்தாபனத்தாருக்கு, நான் தங்கி ஊழியம் செய்கிற பட்டனம் கடினமுள்ளதாய் இருக்கிறது இரட்சிக்கப்படுவதற்கு சாத்தியமே இல்லை என்று எழுதி அனுப்பினாராம்,

ஸ்தாபனத்தார் மறுபதிலாக கண்ணீர்விட முயற்சி செய் (வுசல வுநயசள) என்று பதில் எழுதினார்களாம். தேவ மனுஷன் ஆத்தும பாரத்தோடு கண்ணீர் சிந்த வேண்டும் நிச்சயம் பலன் உண்டு.

தேவனுடைய மனுஷன் : ஓட வேண்டும், நாடவேண்டும், போராட வேண்டும் - Flee - Follow - Fight

I தீமோத்தேயு 6:10.11. பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. நாடவேண்டும் : எவைகளை? நீதி, தேவபக்தி, விசுவசம், அன்பு, பொறுமை, சாந்தகுணத்தை நாடவேண்டும். போராட வேண்டும்: விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடவேண்டும் மேற்கூறப்பட்ட யாவையும் செய்கிற தேவ மனுஷர்களாய் நாம் இருக்கவேண்டும். தேவ மனுஷன் தேரினவனாகவும், எந்த நற்கிரியைகளையும் செய்ய தகுதியுள்ளவனாய் இருக்க வேண்டும்.

2 தீமோத்தேயு 3:16 வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது தேவனுடைய மனுஷன் தேரினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, சிலர் வேதாகமத்தை படிக்காமல் ஆவியானவர் எனக்கு அருள் செய்வார் என்ற எண்ணத்தோடு பிரசங்க மேடையில் நிற்பது ஆபத்தை உண்டாக்கிவிடும். கண்டிப்பாக வேதத்தை நன்றாக படிக்க வேண்டும். முடிந்த வரையில் தேவ ஆவியானவரின் பெலத்தினால் தேவ ஊழியர்கள் எழுதிய வேத சம்மந்தப்பட்ட புத்தகத்தை வாங்கி படிக்கலாம். பவுல் நான் அடைந்தாயிற்று அல்லது முற்றிலும் தேறினவனானேன் என்று எண்ணாமல்.... என்று அறிக்கையிடுகிறார். ஆகிலும் நான் முற்றிலும் தேறவில்லை என்று சொல்லுகிறவனாய் கருதப்படுகிறான்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட சபையாரை எல்லா விசுவாசிகளையும்தேறினவர்களாய் நிறுத்தும் பொறுப்பு உங்களிடத்தில் இருக்கிறது. எனவே நீங்கள் வேத வாக்கியத்தில் தேறினவர்களாய்

இருக்கவேண்டும். நமது ஊழியங்களை முடித்து நாம் பரலோகம் செல்லும் போது நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நல்ல உத்தம ஊழியக்காரனே என்று நம்மை அழைக்கும் போது எவ்வளவு மேன்மையாய் இருக்கும் அல்லவா! உங்களை அழைத்து உலகத்தில் வைத்து அவர் நிறைவேற்ற நினைத்த காரியங்களை உங்களை கொண்டு நிச்சயம் நிறைவேற்றுவார் ஏனெனில் அழைத்தவர் உண்மையுள்ளவர் அவர் அப்படியே செய்வார் ஆமென் !

## ஜெபத்தில் ஓர் தெளிவும் திட்டமும்

லூக்கா 18:35-43 -ல் ஒரு குருடனைப்பற்றியும் அவனுக்கு இயேசு பார்வை கொடுக்கிறதைப் பற்றியும் காண முடிகிறது. இயேசுவே தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என அழைத்தவுடனே அவனுக்கு இயேசு பார்வை கொடுத்துவிடவில்லை. அநேகர் அவனை பேசாமல் இருக்கும்படி அதட்டினாலும் அதை அவன் பொருட்படுத்தாமல் இயேசுவே தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என இரண்டாம் விசை அதிக சத்தமாய் கூப்பிட்டபோது இயேசு அவனை அழைத்துவர கட்டளை கொடுக்கிறார். இப்போது அக்குருடன் இயேசுவின் அருகில் அதாவது மிக அருகில் இருக்கிறான். இருந்தும் கூட இயேசு அவனைப் பார்த்து நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்ன செய்ய வேண்டும் என கேட்டார் என கேட்டார் (லூக். 18:41). பிரியமானவர்களே! சர்வவல்ல தேவனாகிய இயேசுவிற்கு நம் உள்ளிந்திரியங்களையும் நினைவுகளையும் அறிந்திருக்கிற தேவனுக்கு தெரியாதா! அவன் குருடன் என்றும் அவனுடைய வாஞ்சை தான் பார்வை அடைய வேண்டும் என்றும்: இருந்தும் ஏன் இயேசு அவனைப் பார்த்து அவ்வாறு கேட்டார் என்றால்... அக்குருடனுடைய வாயிலிருந்து வருகிற விண்ணப்பமாகிய ஜெபம் ஒரு தெளிவும் திட்டமுமாக இருக்க வேண்டும் என இயேசு விரும்பினார். அது மாத்திரமல்ல நமக்கு ஒரு ஜெப முறையை கற்றுக் கொடுக்கிறார். என் குறை அல்லது தேவை இதுதான் என்று நாமும் தெளிவும் திட்டமுமாக ஜெபிக்க வேண்டும் என இயேசு விரும்பினார். ஆகவே தான் இயேசு அக்குருடனிடம் நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என கேட்டார். இயேசு அப்படி கேட்ட மாத்திரத்திலே அவனும் தெளிவு பெற்றவனாய் திட்டமாய் இயேசுவே நான் பார்வையடைய வேண்டும் என்றான். இயேசுவும் அவனை நோக்கி நீ பார்வையடைவாயாக உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து தேவனை மகிமைப்படுத்தினான் (லூக். 18: 42-43). தேவ பிள்ளைகளே! நமக்கு விசுவாசம் இருக்கிறது நம்பிக்கை இருக்கிறது ஜெபிக்கின்ற வாஞ்சை இருக்கிறது. இருந்தும் சில நேரங்களில் நம் ஜெபங்களுக்கு பதில் வராமல் போவதற்கு காரணம் மேலே குறிப்பிட்ட வண்ணமாக நாமும் ஒரு தெளிவோடும் திட்டத்தோடும் ஜெபிக்க மறந்து விடுகிறோம் என்பதுதான். இனிமேலாவது நம் தேவை அல்லது குறை எதுவானாலும் அதை நன்றாக தீர்மானித்து தேவனிடம் தெளிவும் திட்டமுமாக ஜெபிக்க முற்பட வேண்டும். இப்படி ஜெபிக்கும் போது நிச்சயம் நம் ஜெபத்திற்கு எதிர்பார்த்த ஆசீர்வாதங்கள் தடையின்றி தாமதமின்றி வந்து சேரும். எனவே இன்று முதல் "தெளிவோடு திட்டமாக ஜெபிப்போம் தெளிவோடு திட்டமாக ஜெபிப்போம் தெளிவோடு திட்டமாக ஜெபிப்போம்". தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்

# பேராயர் நியூபிகின் (1909 – 1998)

பேராயர் நியூபிகின் 1909 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 8–ஆம் தேதி நார்தம்பிரியாவில் உள்ள நியூகாசல் என்ற ஊரில் பிறந்தார். அவர் குயின்ஸ் கல்லூரி, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றபின் 1931–ஆம் ஆண்டு கிலாஸ்கோ நகரில் உள்ள கிறிஸ்தவ மாணவர் இயக்கத்தில் சேர்ந்து பணிபுரியலானார். அதே பல்கலைக் கழகத்தில் உள்ள வெஸ்ட் மினிஸ்டர் கல்லூரியில் 1933–36 வரை இறையியல் பயிற்சி பெற்று ஜீலை மாதம் 1936–ஆம் ஆண்டு எடின்பர்க் குருத்துவத்தில் அருட்பொழிவு பெற்றார். பின் தமிழ் நாட்டில் உள்ள ஸ்காட்லாண்டு திருச்சபைக்கு மிஷனெரி ஊழியராகப் பணிபுரிய அனுப்பப்பட்டார். அவர் தமிழ் மொழியை நன்கு கற்று தேர்ந்து பாவமும் இரட்சிப்பும் என்ற தமது முதல் புத்தகத்தை 1937–ல் காஞ்சிபுரத்தில் ஊழியம் செய்யும்போது வெளியிட்டார்.

பேராயர் நியூபிகின் அவர்கள் பல ஆன்மீக நிகழ்ச்சிகளிலும், திருச்சபையின் ஒருங்கிணைப்புத் திட்டங்களிலும் தென்னிந்திய ஒருங்கிணைந்த திருச்சபையோடும், ஆங்லிகன் மற்றும் மெதஸ்டிஸ்டு திருச்சபைகளோடு பங்கு பெற்றார். இவர் 1947–ஆம் ஆண்டு புதிதாக ஸ்தாபிக்கப்பபட்ட தென்னிந்திய திருச்சபையில் பேராயராக அபிஷேகம் செய்யப்பட்டு மதுரை ராமநாதபுரம் பேராயத்தில் நியமிக்கப்பட்டார். 1959–ஆம் ஆண்டு இன்டர்நேஷனல் மிஷனெரி கௌன்சில்லின் (IMC) பொது செயலாளராக நியமிக்கப்பட்டார். இது 1961–ல் ஜெனிவாவில் உள்ள உலக சபை (WCC) சங்கத்தின் ஊழியம் மற்றும் சுவிசேஷப் பணி பிரிவு என்று வழங்கலாயிற்று. அவர் மறுபடியும் 1965–ல் இந்தியாவிற்கு வந்து சென்னைப் பேராயராக 1974–ஆம் ஆண்டு வரை இறை மக்கள் மத்தியில் பணிபுரிந்தார்.

பேராயர் நியூபிகின் ஒரு சிறந்த எழுத்தாளரும் சர்வதேச மாநாடுகளில் சிறந்த பேச்சாளருமாய் விளங்கினார். இவர் கர்த்தரின் வீடு, திறந்த ரகசியம், கிரேக்கருக்கு பைத்தியம், பலதரப்பட்ட சமுதாயத்தில் இறைப்பணி, திரித்துவக்கொள்கை போன்ற பல புகழ் பெற்ற புத்தகங்களை எழுதியுள்ளார். 20–ம் நூற்றாண்டின் மிகவும் மதிப்பிற்குரிய இறையியல் வல்லுனர் என்று இவரை அழைக்கலாம். அவருடைய படைப்புகள் ஆசிய, ஐரோப்பா போன்ற நாடுகளின் எல்லையையும், கலாச்சாரத்தையும் கடந்து பரிமாணிக்கிறது. இவர் 1998 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார். இவர் எதிர் காலத்திற்காக தற்காலத்தில் வாழ்ந்த மாமனிதர். இவர் மரணம், நியாயத்தீர்ப்பு, பலலோகம், நரகம் போன்ற காரியங்களை நன்றாகக் கற்றுத் தெளிவாக உணர்ந்தவர். இதுவே இவருக்கு நிகழ்காலத்தைச் சந்திக்க துணிச்சலையும்,

தைரியத்தையும் கொடுத்து, கர்த்தருடைய திருக்கரத்தில் வெற்றி நிச்சயம் என்னும் முழு நம்பிக்கையையும் கொடுத்தது. பேராயர் அவர்கள் கிறிஸ்தவ சமுதாயத்திற்குக் கொடுத்த இந்த முக்கிய செய்தியினை நாம் இப்போது காணலாம்.

முதலாவதாக மனிதனின் எல்லா இக்கட்டான சூழ்நிலைக்கும் சிலுவையே பதில் என்பதை உறுதிப்படுத்த அழைக்கப்பட்டு இருக்கிறோம். கர்த்தர் எப்படி எல்லா சிருஷ்டியையும் சாவு, அழிவு, மரணம் என்னும் அடிமைத்தனத்தில் இருந்து மீட்கிறார் என்று நற்செய்தி கூறுகின்றது. கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நமக்காகவும் நம் இரட்சிப்புக்காகவும் பாடுபட்டதின் சின்னமாக சிலுவை நற்செய்தியின் நடுவில் நிற்கின்றது. மனித வாழ்க்கையின் எந்தப் பகுதியும் தேவனுடைய இரட்சிப்புக்கு அப்பாற்பட்டதல்ல. கர்த்தருடைய இரக்கம் அவருடைய கரத்தின் கிரியைகள். எல்லாவற்றிற்கும் நேராக நீட்டப்பட்டுள்ளது. இருப்பினும் கிறிஸ்தவ சரித்திரத்தில் சிலுவையின் நற்செய்தி மறுக்கப்பட்டும் நடைமுறைக்கு ஏற்றவாறு மாற்றியும் அமைக்கப்பட்டுள்ளது என்பதற்கு மிகுதியான சான்றுகள் உள்ளன. இவ்வாறு நேரும்போது நற்செய்தியின் வல்லமையும் அதன் தாக்கமும் குன்றிப்போய் விடுகின்றது.

திருச்சபைக்கு நல்ல சாட்சிகள் வேண்டுமாயின் கிறிஸ்துவின் முழு உண்மையையும் மறுபடியும் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் இருக்கவேண்டும் என்று பேராயர் நியூபிகின் அடிக்கடி கூறுவார். பேராயர் நியூபிகின் தென்னிந்தியத் திருச்சபையில் பணியாற்றியபோது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு புரவலராக சுமார் 5 ஆண்டுகள் இருந்தார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணியை அவர் கடவுளின் திருப்பணி என்றும் பரிசுத்த ஆவியின் பணி என்றும் அங்கீகரித்தார். பேராயர் அவர்கள் கிறிஸ்துவின் நற்செய்தியானது வேத வசனங்களோடு மக்களுக்குத் தெளிவாக அறிவிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார். பேராயர் அவர்கள் நம் விசுவாசத்தை (கிறிஸ்துவிற்குள்) உறுதிப்படுத்துவது இறுமாப்பன்று மாறாக அதை சக மனிதருக்கு அறிவியாமல் இருப்பது மாபெரும் துரோகம் ஆகும் என்று கூறியுள்ளார்.

கர்த்தரின் பணியில்,

S.சுகுமார்.

# ஞானத்திற்காக ஜெபியுங்கள்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். இந்த மாத செய்தி மலர் மூலமாக கர்த்தரின் வார்த்தையை பகிர்ந்து கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். "கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்" (நீதி–1:7)

அன்பான சகோதர, சகோதரிகளே! ஒவ்வொரு நாளும் தேவனுக்கு நாம் எவ்விதமான ஜெபங்களை எறெடுக்கிறோம? நமக்கும், நம் குடும்பத்திற்கும் மாத்திரமே ஏறெடுக்கிற சுயநலமா? ஜெபங்களா? அல்லது நம்முடைய பெயர், புகழுக்காகவும், மற்றவர்கள் நம்மை பாராட்ட வேண்டும் என்ற நோக்கத்திற்காக ஜெபிக்கிறோமா? அல்லது விளம்பரத்திற்காக ஜெபிக்கிறோமா? இந்த புதிய மாதத்திலும் நம்முடைய ஜெபத்தின் தரத்தை ஆராய்வோமாக?

## சாலொமோன் ஜெபம்

"அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்" (1–இராஜா–3:9)

அன்பான நண்பர்களே கவனமாயிருங்கள். சாலொமோன் தனது ஜெபத்தில் தேவனுக்கும், அவருடைய ஜனங்களை நேர்த்தியாய் ஆளுவதற்கும், முன்னுரிமை கொடுத்தான். எனவே நம்மை குறித்த காரியம் என்ன? நாம் செய்கின்ற எல்லாவற்றிலும் தேவனுக்கு முன்னுரிமைக் கொடுத்து, அவரை மாத்திரம் பின்பற்ற வேண்டும். தேவனுடைய சமூகத்தில் நம்முடைய ஜெபங்கள் அங்கீகரிக்கப்பட்டதாய் இருக்க வேண்டும். ஏனோதானோவென்று ஜெபங்கள் நம்முடைய வாயிலிருந்து புறப்படாமல் சகலவித பயபக்தியுடனும், தாழ்மையுடனும் ஜெபிக்கவேண்டும். தேவனோடு நாம் செலவழிக்கும் ஜெபநேரம் மதிப்பு மிகந்ததாய் இருக்கட்டும். நாம் ஏறெடுக்கும் ஜெபம் வல்லமை மிகுந்ததாயும், சுயநலமற்றதாயும், அழிந்து போகின்ற ஜனங்களுக்காக கண்ணீர் நிறைந்ததாயுமிருக்க வேண்டும்.

கர்த்தர் சாலொமோனுக்கு பலனளித்தது போன்று நம்மையும் பரலோகத்திலிருந்து கண்ணோக்கிப் பார்த்து பதிலளிப்பார். நாமும் சாலொமோனைப் போன்று வற்றாத நீரூற்றாய் இருப்போம். தேவனோடு செலவழிக்கும் ஒவ்வொரு நொடிக்கும் பரலோகத்திலிருந்து நன்மைகள் உண்டு. எனவே நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்காகிய அவருடைய பாதத்தை தேடுவோம். நிச்சயமாக பரலோகத்திலிருந்து கர்த்தர் நம்முடைய ஜெபத்தைக் கேட்டு ஆசீர்வதிப்பார்.



கிறிஸ்துவக்குள் அன்பு சகோதரி

ஹெப்சிபா ஸ்டீபன்

# உன்னை உயர்த்துவார்

உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக. –சங். 5:11

பிரியமானவர்களே! லூக்கா 18 –ம் அதிகாரம் 9–14 வசனங்களை தியானிக்கும் பொழுது இயேசு நம் ஜெபங்களிலே சில மாற்றங்களை எதிர்பார்க்கிறார் என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. உதாரணமாக பரிசேயனுடைய ஜெபத்தைப் பார்க்கின்ற பொழுது அவன் விபச்சாரம், பரியாசம், அநியாயம் செய்யாதவனாக மட்டுமல்லாமல் வாரத் தில் இரண் டு நாட்கள் உபவாசிக் கிறவனாகவும் தவறாமல் தசமபாகம் செலுத்துகிறவனாகவும் இருந்தான். அவைகள் மிக நல்லதும் அவசியமானதும் கூட. ஆனால் அவன் செய்த தவறு அல்லது உணராதது என்னவென்றால் மற்றவர்களைக் குற்றப்படுத்துகிறவனாகவும் தன்னை அதிக நீதிமானாகவும் எண்ணினான் என்பதுதான். அதற்கு மேலாக மனத்தாழ்மை என்பது சிறிதும் அவனிடமில்லாதிருந்தது. ஆகவேதான் அவன் ஜெபங்கள் கூட கேட்கப்படவில்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ளமுடிகிறது. ஆனால் ஆயக்காரனோ தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல் தன் மார்பிலே அடித்துக் கொண்டு தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் (லூக். 18:13) என்று ஜெபித்தான். இப்படி தன்னை தாழ்த்தி தேவ கிருபைக்காக ஜெபிக்கிறதை காணமுடிகிறது. இதனால் இவனே நீதிமானாக தேவ சமுகத்தில் காணப்பட்டான் அவன் ஜெபமும் கேட்கப்பட்டது. "நாம் எப்படி ஜெபிக்கிறோம்" என்று நம்மை நாமே தேவனுக்கு முன்பாக நிறுத்திப் பார்ப்பது நலமாயிருக்கும். பரிசேயனைப் போல ஜெபிக்கிறோமா அல் லது ஆயக்காரனைப் போல ஜெபிக்கிறோமா! "நமக்குள் பாவமில் லையென்போமேயானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்" (ஐயோவா. 1:8) என வேதம் கூறுகிறது. ஆகவே இவ்வளவு காலம் மேலே உள்ள சத்தியத்தை உணராதவர்களாக அல்லது அறியாதவர்களாக இருந்திருப்போமேயானால் இனிவரும் காலங்களில் நம்மை தேவனுக்கு முன்பாக தாழ்த்தி ஜெபிப்போம . அந்த பரிசேயனைப போல மற்றவர்களை குற்றம் சாட்டிக்கொண்டும் தன்னை அதிக நீதிமானாக எண்ணிக் கொண்டும் மனத்தாழ்மை இல்லாமலும் ஜெபிக்க வேண்டாம். மாறாக நம்மை தாழ்த்துவோம் அப்போது தேவன் நம்மை உயர்த்துவார். "தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (லூக். 18:14) என்றும் "தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (ஐபேது. 5:5) என்றும் கர்த்தர் "உயர்ந்தவராயிருந்தும் தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்" (சங். 138:6) என்ற ஜீவனுள்ள வசனங்களின்படி நம்மை நாம் தாழ்த்தும் பொழுது தேவன் நம்மை உயர்த்துவார் என்பது உறுதி பிரியமானவர்களே. மேலும் "கர்த்தருடைய கிருபையோ அவருக்கு பயந்தவர்கள் மேலும் அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது" (சங். 103:17) என்ற தேவ வசனத்தின்படி நம்மையும் உம்முடைய கிருபையினிமித்தம் என்னை இரட்சியும் –சங். 6:4 நம் பிள்ளைகளையும் பிள்ளைகளின் பிள்ளைகளையும் தேவன் தரும் ஆசீர்வாதம் தொடரும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை. கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு











உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக
ஜெபியுங்கள்

செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்
66021072

செயலாளர் – சகோ. ஜெகநாதன்
23917287 - 66889535

பொருளாளர்– சகோ. எபநேசர்
23922058 - 66857827

பெண்கள் ஐக்கிய தலைவி
சகோதரி . தயா இயேசுரெத்தினம்
23924262 - 94974732

வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. ஆரோக்கியராஜ்
66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church ‘E’ mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only